330

330
1-65



# நஞ்சு உண்டவர்

நெ. து. சுந்தரவடிவேலு



வள் ... வரிசை

2

TB
031(2)
N59
86977

# காணிக்கை

எங்கள் அருஞ் செல்வனாகப் பிறந்து, தன் பள்ளியின் தொண்டனாக இருந்து, தமிழகக் கல்வித் தொண்டர்களின் தோழனாக வளர்ந்து, பிறிதினைத் தன்னைப்போல் கொண்டு உருகி, பள்ளியில் பலருக்கும் பலவும் கிடைக்கத் தூண்டி, திட்டங்கள் சில தந்து, நேர்மையைப் பளிச்சென்று இனிமையோடு எனக்குக் காட்டும் குருவாக வாழ்ந்து, 'எதற்கும் கவலைப் படாதீர்கள் அப்பா' என்று தேற்றி, விரைந்து மறைந்துவிட்ட

குமரகுரு
**கா. சு. திருவள்ளுவனுக்கு.**

330
1-6

# நஞ்சு உண்டவர்

நெ. து. சுந்தரவடிவேலு

முருகன் & கம்பெனி
32, வெங்கடேச கிராமணி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை : : சென்னை - 2

முதற் பதிப்பு — நவம்பர் 14, 1959.

TB
031(2)
N59

# ஏன் ?

"ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் படிக்க எத்தனை நூல்கள்! எவ்வளவு அருமையானவை அப்பா! தமிழ் தெரிந்த குழந்தைகளுக்கும் நூல்கள் வேண்டும். அதே தரத்தில் வேண்டும். இது மற்றவர்களுக்குச் சொல்லி நடப்பதல்ல. நீங்களே எழுதிக் காட்டி விடுங்கள். முதலில் சாக்ரடீசு, இயேசு, காந்தி ஆகியவர்கள் வாழ்க்கையை எழுதுங்கள்" என்று கட்டளையிட்டான் என் மகன், கா. சு. திருவள்ளுவன். இது ஓராண்டிற்கு முன்; விளைவு உங்கள் முன்.

இப்போது வெளியாகும் ஐந்து நூல்களையும் அவனுக்குப் படித்துக் காட்டினேன். அவன் ஆங்காங்குத் திருத்தினான்; செம்மைப் படுத்தினான். உள்ள படங்கள் பல அவன் யோசனையில் பிறந்தவை.

இதில் வரும் கருத்துக்கள் அரசினர் கருத்துக்கள் அல்ல. இவற்றிற்கு நானே பொறுப்பு.

இந் நூல்களை நிறையப் பயன்படுத்துங்கள். படிப்பின் போக்கிலே புதுத் திருப்பத்தைக் காணுங்கள். தமிழருக்குப் பெருந்தொண்டு செய்யுங்கள்.

86977

14—11—'59


ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5.



# நஞ்சு உண்டவர்

தம்பீ, வா. வீட்டிற்குப் போகிறுயா?

ஆம், அண்ணு.



நன்ருக விளையாடினுயா ?

ஓ! வியர்க்க வியர்க்க விளையாடினேன்.
கூடி விளையாடினேன். ஆனுல்...

என்ன ? ஆனுல் என்று இழுக்கிருய் ?

ஒன்றுமில்லை. மறந்து விளையாட முடிய
வில்லை.

ஏன் ? எதை நினைத்துக் கொண்டாய்?

நீங்கள் சொன்னதை.


மறந்து விளையாடச் சொன்னேன். அதையா ?

அதல்ல. இன்னமும் சொன்னீர்கள்.

எத்தனையோ சொன்னேன் !

கொடுமையைப் பற்றி...

ஓ! ஓ! அதுவா! நஞ்சைக் கொடுத்தது...




ஆம். நஞ்சை உண்டவர் யாரோ? என்ன பேரோ?

அவர் ஒரு கிரேக்கர். அவர் பெயர் சாக்ரடீசு.

கிரேக்கர் என்றால் என்ன?

கிரேக்க நாட்டில் பிறந்தவர்.

இந்தியாவில் பிறந்தவரை இந்தியர் என்பது போல.

ஆம். அப்படித்தான்.

அவர் பிறந்த ஊர் எதுவோ?

பிறந்த ஊர் ஏதென்சு நகரம்.

கிரேக்க நாடு எங்கே இருக்கிறது?

ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கிறது.



**கண்டம் என்ருல் என்ன ?**

உலகம், ஆறு பெரிய நிலப் பிரிவுகளாக உள்ளது. ஒவ்வொன்றிற்கும் ஒரு கண்டம் என்று பெயர்.

**ஒரே கண்டத்தில் பல நாடுகள் உண்டா?**

உண்டு. ஐரோப்பா அம்மாதிரிக் கண்டம்.

**சாக்ரடீசுக்கு ஏன் நஞ்சைக் கொடுத்தார்கள் ?**

அவர் சாகவேண்டுமென்று முடிவு செய்ததால்.

**அவர் யாரையாவது கொன்ருரா ?**

இல்லை. கோபிக்கக்கூட அவருக்குத் தெரியாதே.

**பின் என்ன குற்றம் செய்தார் ?**

ஆபத்தான மனிதர் என்ருர்கள்.

**ஏன் ? அரசனைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தாரா ?**

இல்லை. அப்போது அங்கு அரசனே இல்லை.

**அப்படியானுல் யார் ஆண்டார்கள் ?**

ஊர்க்குடிகளே ஆண்டார்கள்.

நம் நாட்டைப்போல் குடி ஆட்சியா ?

ஆம். அதற்கு மேலும். ஒவ்வொரு நகரமும் தனிக்குடியாட்சி.

குடியாட்சித் தலைவர் ஆவதற்குக் கட்சி சேர்த்தாரா ?


தலைமைப் பித்து அவருக்கு இல்லை.

அந்நிய நாட்டோடு சேரத் திட்டம் போட்டாரா ?

அதுவும் இல்லை. தாய்நாட்டிற்காகப் போரிட்டார்.

தமக்கும் ஆசை இல்லை. ஊராருக்கும் தீங்கு செய்யவில்லை. பின் எப்படி ஆபத்தானவர் ?

இளைஞர்களைக் கெடுக்கிறார் என்றார்கள்.



எப்படி? ஆடம்பரமாக வாழச் சொன்ஞரா?

இல்லை. தாமே எளிய வாழ்வு வாழ்ந்து காட்டியவராயிற்றே.

உழைக்காமல் உண்ணச் சொன்ஞரா?

அதுவும் இல்லை. தாமே உழைத்து உண்டவர்.


அவருக்கு என்ன வேலை?

அவர் வேலை சிற்பத் தொழில்.

சிலை செதுக்குவதுதானே?

ஆம். பேசாத சிலையை மட்டுமல்ல.

என்ன! பேசும் சிலையும் செய்ய முடியுமா?



பேசும் நம்மையும் உருவாக்க நினைத்தார்.

**நம்மை உருவாக்குவதா! நம்மை உளி கொண்டு செதுக்கினால் வலிக்காதா? பின் எதைச் செதுக்கினார்?**

நம் உடலைச் செதுக்கவில்லை.

**பின் எதைச் செதுக்கினார்?**

நம் அறிவைச் செதுக்க முயன்றார்.

**அதை எப்படிச் செய்தார்?**

கேள்வி கேட்டு, சிந்திக்க வைத்து, எடுத்துக் காட்டி.

**அவர் வேலை கெடாதா?**

வேலை செய்தது செல்வம் திரட்ட அல்ல.

**பின் எதற்கு?**

தம் சொற்பத் தேவைக்கு மட்டுமே.

**அப்போது நிறைய ஓய்வு இருந்திருக்கும்?**

ஆம். பொதுத்தொண்டிற்கு நேரம் இருந்தது.


**கேள்வி கேட்டார் என்றீர்களே, யாரைக் கேட்டார்? எங்கே கேட்டார்?**

எல்லோரையும் கேட்டார். எல்லா இடத்திலும் கேட்டார்.

**என்ன கேட்டார்? என்ன சொன்னார்?**

"நீ யார்? இது என்ன?"

**இவ்வளவுதானா?**



இல்லை. மேலும் கேட்டார். "அது ஏன் அப்படி இருக்க வேண்டும்? ஏன் வேறு மாதிரி இருக்கக் கூடாது?'' இன்னும் பல.

**இக் கேள்விகளில் என்ன தப்பு?**

அதுதான் தெரியவில்லை.

**பதில் சொல்லுவதுதானே?**

சொன்னால் கேள்வி மேல் கேள்வி.


**சிந்தித்தால் பதில் மேல் பதில்**

சிந்திக்க வேண்டுமே!

**அதில் என்ன சங்கடம்?**

பழக்க மில்லையே!

**ஏன் இல்லை?**



செல்வம், களிப்பு, புகழ், இவை சிந்திக்க விடவில்லை.

சிந்திக்கா விட்டால் எப்படி மனிதனாக முடியும்?

அதைத்தான் சாக்ரடீசு சொன்னார்.

உள்ளதைச்சொன்னால் உடம்பு எரிச்சல்.

ஆம். அதோடு விட்டாரா?


இன்னும் என்ன சொன்னார்?

''யாரோ சொன்னார் என்று நம்பாதே.''

தப்பென்ன? நாம் கிளிப்பிள்ளைகளா?

''எப்போதோ சொன்னார் என்பதற்காக நம்பாதே.''





மெய்தானே. அப்போது தெரியாதது இப்போது தெரிகிறதே.

புது வழி சொன்னுல் பழைய போக்கில் போவோர்க்குக் கோபம்.

ஆமாம் சாமிகளுக்கு ஆத்திரம் வந்ததா ?

வந்தது. வழக்குப் போட்டார்கள்.

என்ன வழக்கு ?

இளைஞர்களைக் கெடுக்கிருன் என்று.

ஆடுகளைப் போல் அடங்கமாட்டார்கள் என்ற அச்சமா ?

அதுதான்.



வழக்கின் முடிவு என்ன?

சாக்ரடீசு குற்றவாளி. ஆகவே சாக வேண்டும்.

ஆ! தூக்கிலிடவா?

இல்லை. அவர்கள் தூக்கில் இடுவதில்லை. நஞ்சைக் குடிக்க வைப்பார்கள்.


அவரையும் குடிக்க வைத்தார்களா?

ஆம்.

அய்யோ! எப்படித்தான் குடித்தாரோ?

மகிழ்ச்சியோடு.

என்ன! மகிழ்ச்சியோடா!





ஆம், முகம் சுளிக்காமல் குடித்தார். அமைதியாக இறந்தார்.

**அப்பப்ப! என்ன வீரம்! முடிவு சொன்னதும் நஞ்சைக் கொடுத்தார்களா?**

இல்லை. பல நாட்கள் சென்றுதான்.


**அதுவரை?**

சிறையில் இருந்தார்.

**தப்பியோட முடியவில்லையா?**

அப்படிச் செய்ய முயலவில்லை.

**ஏன்? ஆபத்திற்குப் பாபமில்லையே!**



நண்பர்கள் அப்படித்தான் சொன்னார்கள். அவர் கேட்கவில்லை.

**ஏன் அந்தப் பிடிவாதம் ?**


அவர் இருந்தது எங்கே ? வாழ்ந்தது எங்கே ?

**கிரேக்க நாட்டில்.**

பெற்றுக்காத்த நாட்டைக் கைவிடலாமா?

**நாடு தன்னைக் கைவிட்டால் ?**

அப்பொழுதும் தவற்றைக் காட்டுவது உரிமை. தலையைக் கொடுப்பது கடமை.



எதற்கு ?

நாட்டிற்கு.

இதனாலா அவர் தப்பியோட மறுத்தார் ?

ஆம். அதுவே நாகரிகம்.

வாழ்க பெரியார்.

86977

சி/1259

அடுத்தது?

உடலைத்தான் கொல்லலாம்.
உண்மையைக் கொல்ல முடியுமா?

இதை உணர்த்த

**சிலுவையில் மாண்டவர்**

**25 காசுகள்**